செ. வெ. எண். 486 நாள். 16.8.2012

# செய்தி வெளியீடு

நெடுஞ்சாலைத்துறையின் பொறியியல் வல்லுநர்களை அடங்கிய இந்திய சாலை குழுமம் 1937ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இந்தியா முழுவதும் உள்ள நெடுஞ்சாலைத்துறை வல்லுநகர்கள் தங்களின் தொழில்நுட்ப அனுபவங்களையும், புதிய கண்டுபிடிப்புகளையும் பற்றி விவாதித்து புதிய தொழில்நுட்பங்களை நெடுஞ்சாலைத்துறையின் சாலை மற்றும் பாலங்களின் கட்டுமானம் மற்றும் மேம்பாட்டிற்கு அறிமுகம் செய்வதற்கு இந்த குழுமம் இந்தியாவில் வருடம் ஒரு மாநிலத்தில் கூடி விவாதிப்பது வழக்கம். இந்திய சாலை குழுமத்தின் கூட்டம் தமிழ்நாட்டில் 1980ஆம் ஆண்டு ஊட்டியிலும், 1989 ஆம் ஆண்டு சென்னையிலும், 2000 ஆம் ஆண்டு மதுரையிலும் சிறப்பாக நடைபெற்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்திய சாலைக் குழுமத்தின் 73வது ஆண்டு கூட்டம் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் நகரில் கொடிசியா வளாகத்தில் 2013 சனவரி திங்கள் 7ஆம் நாள் முதல் 11 வரை நடைபெறுவதற்கு இசைவு அளித்துள்ளார்கள்.

இந்திய சாலைக் குழுமத்தின் 73வது ஆண்டு கூட்டத்தின் தொடர்ச்சியாக, இந்திய சாலை குழுமத்தின் ஆண்டுக்கூட்டம் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக **“www.73irccoimbatore.in”** என்ற இணையதளம் இன்று 16.08.2012 தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**